[2022] 8 எஸ்.சி.ஆர். 837

வருவாய்க் கொட்ட அதிகாரி மற்றும் ஒருவர்

-எதிர்-

இஸ்மாயில் பாய் மற்றும் பலர்

(உரிமையியல் மேல்முறையீடு எண்கள்.8727-28/2022)

நவம்பர் 22, 2022

[மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். அப்துல் நஷீர்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஜே.கே.மஹேஸ்வரி]

நிலம் கையகப்படுத்துகைச் சட்டம், 1894 - இழப்பீடு - உயர்நீதிமன்றத்தால் கணக்கீடு செய்தல் - முறையாக இல்லாதபோது - முடிவு: கிராமத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலமானது ஹைதராபாத்தை சுற்றியுள்ள பிரபலமான பகுதி - அது 1981-ம் வருடத்தில் 40 ஆண்டுகளுக்குமுன் கையகப்படுத்தப்பட்டது மற்றும் நீதிமன்றத்தில் வழக்குக்குப் பின் ஒரு சதுர கஜத்திற்கு ரூ.6/- என இழப்பீடாக நிலம் கையகப்படுத்தும் அதிகாரியால் முடியுவ் செய்யப்பட்டது - கையகப்படுத்தப்பட்ட நிலம் தற்போது 100 மடங்கு விலை ஏறியுள்ள ஹைதராபாத்தின் மையப்பகுதியில் உள்ளது - நில உரிமையாளர்களால் பதிவாவணத்தில் கொண்டு வரப்பட்டு ஆதரவளிக்கப்பட்ட ஒரு சதுர கஜத்திற்கு ரூ.250/-குக் குறையாமல் நிலத்தின் மதிப்பு கணக்கிடப்பட முடியாது - எனவே ஒரு சதுர கஜத்திற்கு ரூ.100/- என

இழப்பீட்டை கணக்கிட்டதில் உயர்நீதிமன்றம் பிழை புரிந்துள்ளது - மேலும், நகரம் ஏற்கனவே மேம்பாடு அடைந்துவிட்டது - 40 ஆண்டுகளுக்கு முன் பயன்படுத்தப்பட்ட நிலத்திற்காக நில உரிமையாளர்களை ஏற்கனவே ஏற்பட்டுவிட்ட வளர்ச்சிக்காக வளர்ச்சிக்கான கட்டணத்தை, அதுவும் பல தலைமுறையாக இழப்பீடு வழங்காத நிலப்பகுதிக்கு செலுத்த தற்போது கட்டாயப்படுத்த முடியாது - உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது - குறித்தனுப்புகை நீதிமன்ற உத்தரவு மீட்டெடுக்கப்படுகிறது.

மேல்முறையீடுகளை தீர்வு செய்த உயர்நீதிமன்றத்தின் தீர்மானமானது:-

1.1. தரப்பினர்களுக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர்களின் வாதங்களைக் கேட்டும், பதிவில் கொண்டுவரப்பட்ட சான்றாவணங்களைப் பார்த்தும் நிலம் கையகப்படுத்துதல், 1981-ம் வருடத்தில் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. குடிநீர், மின்வசதி, வடிகால், தொலைபேசி, போக்குவரத்துக்கு போன்ற வசதிகளைக் கொண்ட மிகுந்த வளர்ச்சியுற்ற இரட்டை நகரத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலம் அமைந்துள்ளது என்பது மறுக்க முடியாதது. அந்த ஆண்டில் அட்டாபூர் கிராமத்தில் எந்த கிரைய ஆவணமும் இல்லாததால் அருகிலுள்ள கிராமமான பகதூர்புர் கிராமத்தில் நடைபெற்ற ஒரே கிரைய ஆவணம் வா.சா.1 நாள் 21.09.1981 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. டோபோ வரைபடமான வா.சா.4-ன்படி பகதூர்புர் மற்றும் அட்டாபூர் ஆகிய இரு கிராமங்களிடையே உள்ள

தூரம் 1320 மீட்டர் தான். அந்த கிரைய ஆவணத்தின்படி சொல்லப்பட்ட நிலத்தின் மதிப்பு ஒரு சதுர கஜத்திற்கு ரூ.200/-ஆகும். இரு வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைகளான வா.சா.2 மற்றும் வா.சா.3 ஆகும். அதில், அதே நேரத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட இழப்பீடு ஒரு சதுர கஜத்திற்கு ரூ.250/-ஆகும். அந்த ஆவணங்கள் அ.சா.1 மற்றும் அ.சா.2 சான்றுரை உறுதிபடுகிறது. துறை சாட்சியான பி.சா.2, தமது வாக்குமூலத்தில் கடேதான் கிராமம் ஒரு தொழிற்பேட்டை என்றும் அட்டாபூர் கிராமத்திலிருந்து 3 1/2 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது என ஒப்புக்கொள்கிறார். வேளாண் பல்கலைக்கழகம், தேசிய காவல்துறை பயிற்சி மையம் அருகில் அமைந்துள்ளது. கையகப்படுத்தப்பட்ட நிலத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் அந்திரப்பிரதேச உயர்நீதிமன்றம் அமைந்துள்ளது. நேரு விலங்கியல் பூங்காவுக்காக வடிகால் அடுக்கு அமைப்பதற்காக அந்த நிலம் தேவைப்பட்டுள்ளது. நில உரிமைதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட சான்று, எந்த ஆவணமும் தாக்கல் செய்து எதிர்க்கப்படவில்லை. மாறாக, துறை சாட்சி, நீதிமன்றம் முன்பாக ஹைதராபாத் நகரின் சுற்றுப்புறத்தில் உள்ள முக்கியமான பகுதியான கிராமத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலம் உள்ளதெனத் தெரிவித்துள்ளார். பதிவுருக்களில் எந்தப் பொருண்மையும் இல்லாததால் அருகில் உள்ள கிராமமான பகதூர்புரின் கிரைய ஆவணமாக வா.சா.1-ஐ குறித்தனுப்புகை நீதிமன்றம் சரியாக சார்ந்துள்ளது. கையகப்படுத்தப்பட்ட நிலம் அட்டாபூர் கிராமத்தில் அமைந்திருந்தாலும் ஆனால்

அது, ஒரு சதுர கஜத்திற்கு ரூ.200/- என நில மதிப்பீடு செய்யப்பட்டுள்ள கிராமமான பகதூர்புருக்கு அருகில் உள்ளது. அருகிலுள்ள நிலத்துக்கு இழப்பீடு வழங்கும்போது, தீர்ப்பாணைகள் வா.சா.2 மற்றும் வா.சா.3-ல் குறிப்பிட்டுள்ளபடி ஒரு சதுர கஜத்திற்கு ரூ.250/- என நீதிமன்றம் மதிப்பை முடிவு செய்துள்ளது. 28.08.1991 கோட்ட வருவாய் அதிகாரியின் நேர்முகக் கடிதத்தில் கையகப்படுத்திய நாளின் குறைந்தபட்ச மதிப்பு ஒரு சதுர கஜத்திற்கு ரூ.200/- என ஒப்புக் கொண்டுள்ளார். இந்த விஷத்தை சமரசத்திற்காக அனுப்பிய பிறகு, வருவாய் கோட்டாட்சியரால் கூட்டு சமரசக் குறிப்பு நிறைவேற்றப்பட்டு அதில் ஒரு சதுர கஜத்திற்கு ரூ.500/- என்பதற்குப் பதிலாக, வருவாய்த்துறை ஒப்புக்கொண்டவாறு, சமரசத் தீர்வாளர் ஒரு சதுர கஜத்திற்கு ரூ.350/- என நிர்ணயம் செய்துள்ளார். கோரப்பட்ட நிலத்தின் மதிப்பு அதிகமாக இருப்பதாக எதிர்க்காமல், அத்தகைய சமரசம் மேல் அதிகாரியின் ஒப்புதல் இல்லாமல் ஒப்பம் இடப்பட்டது என்று மட்டுமே, திரும்பப்பெறும் மனுக்களில் கூட்டு சமரசக் குறிப்பு எதிர்க்கப்பட்டுள்ளது. எனவே, நில உரிமையாளர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்க்கப்படாத ஆவணங்களை உதாசீனப்படுத்தியும், பதிவில் எதிர்ப்புடன் கூடிய ஆவணங்கள் ஏதும் இல்லாதபோது மாற்றுக் கணக்கீட்டைப் பயன்படுத்தி ஒரு சதுர கஜத்திற்கு ரூ.100/- என இழப்பீட்டை கணக்கீடு செய்ததில் உயர்நீதிமன்றம் பிழை புரிந்துள்ளது. துறை சாட்சியான பி.சா.2-ன் சாட்சியப்படி, தற்போது ஹைதராபாத்தின் மையப்பகுதியான வேளாண் பல்கலைக்கழகம், தேசிய காவல்துறை பயிற்சி மையம் மற்றும்

ஆந்திரப்பிரதேச உயர்நீதிமன்றத்தின் அருகில் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. மேற்சொன்னவற்றை பரிசீலித்தும், கையகப்படுத்தப்பட்ட நாளான அதாவது 40 வருடங்களுக்கு முன்புள்ள 1981-ஐ கருத்தில் கொண்டும், அந்த நிலத்தின் மதிப்பு ஒரு சதுர கஜத்திற்கு ரூ.250/-குக் குறையாமல் கணக்கிடப்பட வேண்டும். அது நில உரிமையாளர்களால் சாட்சியம் மூலம் பதிவு செய்யப்பட்ட ஆதாரமாக உள்ளது.

1.2. தற்போதைய வழக்கில், 1981-ஆம் ஆண்டில் 40 ஆண்டுகளுக்கு முன் கையகப்படுத்தப்பட்டு, ஒரு சதுர கஜத்திற்கு ரூ.6/- என, நீதிமன்றங்களில் வழக்கிற்குப் பின்னர் நிலம் கையகப்படுத்துகை அதிகாரியால் இழப்பீடு முடிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் மதிப்பு 100 மடங்காக உயர்ந்துள்ள ஹைதராபாத்தின் மையப்பகுதியில், இந்த நிலம் அமைந்து உள்ளது. நகரின் வளர்ச்சி ஏற்கனவே நடைபெற்றுவிட்டது. 40 ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்ட நில உரிமையாளர்களின் நிலங்களுக்கு தசாங்களாக இழப்பீடு வழங்காத ஒரு நிலப்பகுதிக்கு மட்டுமே, ஏற்கனவே ஏற்பட்ட வளர்ச்சிக்கு வளர்ச்சி கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கமுடியாது. எனவே, வருவாய்த்துறையால் வைக்கப்பட்ட வேண்டுரைகள் தகுதி இழக்கிறது. குறித்தனுப்புகை நீதிமன்றத்தின் உத்தரவு மீட்டெடுத்து, உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது. குறித்தனுப்புகை நீதிமன்றத்தால் முடிவு

செய்யப்பட்டவாறு இழப்பீட்டுத் தொகை கணக்கிடப்பட்டு, இந்தத் தீர்ப்புரை நாளிலிருந்து இரு மாதங்களுக்குள் செலுத்தப்படவேண்டும்.

ரெட்டி வீரனா -எதிர்- உத்தரப்பிரதேச மாநில அரசு மற்றும் பலர் -

2022 எஸ்.சி.சி. இணையவழி 562 – குறிப்பிடப்படுகிறது.

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண்கள்.8727-8728/2022.

தெலுங்கானா மற்றும் ஆந்திர பிரதேச மாநில ஹைதராபாத் உயர்நீதிமன்றத்தின் எல்.ஏ.ஏ.எஸ். எண்.303/2013-ல் 08.10.2018 தேதியிடப்பட்ட எல்.ஏ.ஏ.எஸ்.எண்.303/2018-ல் அவமதிப்பு வழக்கு எண்.908/2018-ல் 24.11.2017 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண்கள்.8729-8732 மற்றும் 8733-8734/2022.

தரப்பினர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்கள் - கே. ராதாகிருஷ்ணன், சேஷாத்திரி நாயுடு, ரவி ஷங்கர் ஜன்தயலா. மூத்த வழக்குரைஞர்கள், பி. வெங்கட் ரெட்டி, பிரசாந்த் தியாகி, பி. ஸ்ரீனிவாஸ் ரெட்டி, தி/ள். வெங்கட் பல்வாய் லா அஸோஸியேட்ஸ், எலமஞ்சிலி ஷிவா சந்தோஷ் குமார், ருத்ரஜித் கோஷ், தருண் குப்தா, அபிஷேக் சர்மா, வெங்கடேஸ்வர ராவ் அனுமோலு, சுதிர் குமார் ஓஜா, சன்னி குமார்.

உயர்நீதிமன்ற தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு. ஜே.கே.மஹேஸ்வரி அவர்களால் பகரப்பட்டது.

அனுமதி வழங்கப்பட்டது.

2. நில உரிமையாளர்களுக்கு உடைமையான நிலத்திற்கு இழப்பீட்டை பெற அவர்களின் தொடர் வழக்குகளின் வரலாறு இவ்வழக்கில் உள்ளது. நேரு விலங்கியல் பூங்காவின் விரிவாக்கத்திற்காக ரங்கா ரெட்டி மாவட்டம், ராஜேந்திர நகர் மண்டல் அட்டாபூர் கிராமம் நில அளவை எண்.268-ல் உள்ள 3 ஏக்கர் 23 குண்டாஸ் அளவுள்ள நில உரிமையாளர்களின் நிலம் கையகப்படுத்துகை சட்டம், 1894 (சுருக்கமாக நி.கை.சட்டம்) பிரிவு 4(1)-ன் கீழ் அறிவிக்கையும் மற்றும் பிரிவு 6-ன் கீழ் இறுதி அறிவிக்கையும் முறையே 19.03.1981 மற்றும் 09.04.1981-ல் வெளியிடப்பட்டது. அவை உடைமையில் எடுக்கப்பட்ட பின்னரும் தீர்வம் வழங்கப்படவில்லை மற்றும் இழப்பீடு ஏதும் தரப்படவில்லை. நில உரிமையாளர்கள், அந்திரப்பிரதேச உயர்நீதிமன்றத்தின் முன்பாக நீ.பே.மனு எண்.17119/1996- ஐ தாக்கல் செய்து, அது உத்தரவு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து மூன்று மாதத்திற்குள் தீர்வம் வழங்குமாறு எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு (வருவாய்த்துறை) 22.04.1997 தேதியிட்ட உத்தரவு மூலம் தீர்மானிக்கப்பட்டது. அதன் பின்னரே வழக்கு எண்.1/1844/89-ல் 07.06.1997 அன்று தீர்வம் பிறப்பிக்கப்பட்டு, ஒரு சதுர கஜத்திற்கு ரூ.6/- என குறைந்த இழப்பீடு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

3. நி.கை. சட்டம் பிரிவு 18-ன் படி, நில உரிமையாளர்கள் விபரம் கேட்டு மனு அளித்து அதற்கு பதிலில்லாததால், மீண்டும் உயர்நீதிமன்றத்தை அணுக அவர்கள் தள்ளப்பட்டனர். நில உரிமையாளர்கள் நீ.பே.மனு எண்.5676/2003-ஐ தாக்கல் செய்து, ஆறு மாதத்திற்குள், குறித்து அனுப்புவதற்கான நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டு 18.04.2003 அன்று முடிவு செய்யப்பட்டது. உயர்நீதிமன்றத்தின் உத்தரவிற்குப் பின்னரும் குறித்து அனுப்பப்படாததால், நில உரிமையாளர்கள் அவமதிப்பு வழக்கு எண்.1668/2004-ஐ தாக்கல் செய்தனர். அவமதிப்பு வழக்கில் அறிவிப்பு அனுப்பிய பின்னர், ரங்கா ரெட்டி மாவட்டம் I-வது கூடுதல் முதுநிலை உரிமையியல் நீதிபதிக்கு நிலம் கையகப்படுத்துகை அதிகாரி குறித்தனுப்புகை செய்து, அது மு.வ எண்.205/2005-ஆக பதிவு செய்யப்பட்டது. குறித்தனுப்புகை நீதிமன்றம், ஒரு சதுர கஜத்திற்கு ரூ.250/- என வட்டியுடன் கூடிய கருணைத் தொகையையும் நில உரிமையாளர்களுக்கு இழப்பீடாக செலுத்தும்படி மேல்முறையீட்டாளர்களுக்கு உத்தரவிட்டு 03.09.2012 அன்று தீர்வளித்தது.

4. குறித்தனுப்புகை நீதிமன்றத்தின் உத்தரவு மூலம் உயர்த்தப்பட்ட தொகை, உயர்நீதிமன்றம் முன்பு வருவாய்துறையால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளான எல்.ஏ.ஏ.எஸ். எண்கள்.303/2013 மற்றும் 330/2015 மூலம் எதிர்க்கப்பட்டது. நில உரிமையாளர்கள் போதிய இழப்பீடு கோரி மேல்முறையீடு தாக்கல் செய்தனர். இது கேட்புகையின் போது, இரு தரப்பினரின் இசைவுடன் 01.02.2016 தேதியிட்ட உத்தரவு மூலம் சமரச மையத்திற்கு மேல்முறையீடுகளை

உயர்நீதிமன்றம் குறித்தனுப்பியது. அந்த உத்தரவின் தொடர்புடைய சங்கதி பின்வருமாறு:-

"இங்குள்ள சூழ்நிலைகளில், பயிற்சி பெற்ற சமரச தீர்வாளர், போதிய பொறுமையை வெளிப்படுத்தி பணியாற்றினால் இரு தரப்பினரும் திருப்தியுறும் வகையிலும் திறமையாகவும் முரண் சரிசெய்ய மிகுந்த வாய்ப்புள்ளது என நாங்கள் கருதுகிறோம். மேற்படி பொருண்மைகள் மற்றும் சூழிநிலைகளிலிருந்து, கடந்த காலத்தில் நிலம் கையகைப்படுத்தும் விஷயம் தொடர்பான இதுபோன்ற பொறுப்புகளை கையாண்ட, முடியுமானால் பயிற்சி பெற்ற சமரசத் தீர்வாளர்களில் ஒருவருக்கு இந்த மேல்முறையீடுகளில் உள்ள பிரச்சனையை குறித்தனுப்பும்படி உயர்நீதிமன்றத்துடன் இணைக்கப்பட்ட சமரச மற்றும் இசைவிணக்க மையத்தின் பொறுப்பிலுள்ள துணை இயக்குனருக்கு கோரும்படி பதிவாளர் அலுவலகத்திற்கு உத்தரவிடுவது பொருத்தமாக இருக்கும் என நாங்கள் கருதுகிறோம்."

சமரச நடவடிக்கைகளின்போது, 28.04.2016-ல் தரப்பினர்கள் கூட்டு சமரச குறிப்பினை ஏற்படுத்திக் கொண்டனர், அதில் வருவாய்த்துறை, ஒரு சதுர கஜத்திற்கு ரூ.350/- என இழப்பீடு வழங்க ஒப்புக்கொண்டது. அதன்படி, ஒரு சதுர கஜத்திற்கு ரூ.500/- என்று நில உரிமையாளர்கள் அளித்த முன்மொழிதலை தரப்பு ஏற்கவில்லை. எனினும், ஒரு சதுர கஜத்திற்கு ரூ.350/-ஐ இழப்பீடாக நிர்ணயித்து மொத்தத்தொகை ரூ.3,48,46,578/- என தீர்மானித்து 05.05.2016 அன்று தனது

அறிக்கையை சமரசத் தீர்வாளர் மற்றவற்றிற்கிடையே சமர்ப்பித்துள்ளார். சமரசத் தீர்வாளர் அறிக்கை பொருத்தமானது என்பதால் அது கீழே தரப்பட்டுள்ளது:

"தீர்வத்தின்படி, அறிவிக்கை நாளான 03.03.1981 முதல் 07.06.1997 வரை பிரிவு 23 (2)-ன் கீழ் சந்தை மதிப்பில் கருணைத்தொகையாக 30 சதவிகிதமும், பிரிவு 23 (1)-ன் கீழ் கூடுதல் சந்தை மதிப்பில் ஆண்டு ஒன்றிற்கு ஒரு சதுர கஜத்திற்கு ரூ.500 என மொத்தப் பரப்பளவான 8651.5 சதுர கஜத்திற்கு வழங்கும்படி தரப்பினர் கோரினர்.

நிலம் கையகப்படுத்துகை அதிகாரியால் நி.மனு எண்.11/2013 (நிறைவேற்றுகை மனு)-ல் செலுத்தப்பட்ட தொகையை கழித்த பின்னர் தரப்பினர்களுக்கு செலுத்தப்படவேண்டிய வட்டியை கணக்கிட்டால் மேற்படி கோரிக்கையிலிருந்து கோருரிமை தொகையானது ரூ.7,33,17,558/- ஆகும்.

தரப்பினர்களிடையே கடுமையான முயற்சி மேற்கொண்டபின், என் முன்பாக சமரச மையத்தில் 28.04.2016-ல் இறுதி செய்யப்பட்டு ஒரு சதுர கஜத்திற்கு ரூ.350/- என நில மதிப்பீடு செய்ய உத்தேசிக்கப்பட்டு, அதிகாரியால் 20 சதவிகித நில மதிப்பு கழித்துக் கொள்ள முன்மொழிதல் செய்யப்பட்டு, அந்த தொகை ரூ.3,48,46,578/- என வந்தது மற்றும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை திரும்பப்

பெறுவதற்குட்பட்டு முழுதும் மற்றும் இறுதித் தீர்வு என்பதில் தரப்பினர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்."

5. எந்த எதிர்கால பிரச்சனையையும் தவிர்க்கும் பொருட்டு நிதியை விரைவாக அரசிடமிருந்து பெறுவதற்கு இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுக்குமாறு ஹைதராபாத்திலுள்ள பகதூர்புரா, நேரு விலங்கியல் பூங்காவின் காப்பாளருக்கு நாள் 07.05.2016 அன்று தெலுங்கானா அரசின் துணை மாவட்ட ஆட்சித் தலைவர், கடித எண்.1/4279/1997-ஐ அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் தொடர்புடைய சங்கதிகள் பின்வருமாறு:

"நில மதிப்பீட்டை தீர்வு செய்வது தொடர்புடைய விவாதத்தின்போது, வழக்காடும் தரப்பினர் ஒரு சதுர கஜத்திற்கு சந்தை மதிப்பு ரூ.500/- என நிர்ணயிக்கும்படி கோரினர். ஆனால், நீண்ட விவாதத்திற்குப் பின்னர், ஊடகம் மூலம் ஒரு சதுர கஜத்திற்கு ரூ.350/- என நில மதிப்பை சமரச தீர்வாளர் முன்மொழிந்த பின்னர் அதை அதிகாரி முன்வைத்தார். இறுதியாக, நில விவரம் நிலத்தின் சந்தை மதிப்பை பரிசீலித்து சமரச தீர்வாளரின் முன்மொழிதலை ஏற்று ஒரு சதுர கஜத்திற்கு நிலமதிப்பு ரூ.350/- என நிர்ணயித்தார். அதன்படி, சமரச மையத்தின் முன் 30.04.2016 அன்று, கூட்டு சமரச குறிப்பு தாக்கல் செய்யப்பட்டது.

மேற்சொன்னதை ஏற்ற, ஹைதராபாத் உயர்நீதிமன்ற சமரச தீர்வாளர், எல்.ஏ.ஏ.எஸ். எண்.353/2015-ல் உள்ள தரப்பினர்களான (காலம் சென்ற)

ஹாசன் அலியின் குமாரர் திரு. இஸ்மாயில் பாய் பெயரில் காசோலையை வழங்க ஏற்பாடு செய்து, சமரச மையம் முன்பாக 20.05.2016 அன்று அல்லது அதற்கு முன்பாக உத்தரவிட்டு பிரச்சனையை தீர்வு செய்து, உயர்நீதிமன்றம் முன்பு சமர்ப்பிக்க 05.05.2016 தேதியிட்ட கடிதத்தை அனுப்பினார்.

மேற்சொன்னவற்றை கருத்தில் கொண்டு, அரசிடம் இந்த விடயத்தை முன்வைத்து எதிர்காலத்தில் இந்தப் பிரச்சனைகளையும் தவிர்க்கும் பொருட்டு விரைவில் நிதியைப் பெறவும் தயவு செய்து ஏற்பாடு செய்ய வேண்டும்."

6. சமரசத் தீர்வு அறிக்கையின் அடிப்படையிலும், தரப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட கூட்டு சமரசக் குறிப்பினை சார்ந்தும், வருவாய்துறையாலும், நில உரிமையாளர்களாலும் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகள் 10.06.2016 தேதியிட்ட உத்தரவில் முடித்து வைக்கப்பட்டது. உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவு பின்வருமாறு:-

"1. இந்நீதிமன்றத்தின் 01.02.2016 உத்தரவின்படி மேலே கூறிய மேல்முறையீடுகளில் தரப்பினர்களிடையே உள்ள பிரச்சனை சமரச மற்றும் இசைவுத் தீர்வு மையத்திற்கு அனுப்பப்படுகிறது.

2. இந்நீதிமன்றத்துடன் இணைக்கப்பட்ட சமரச மற்றும் இசைவுத் தீர்வு மையத்தின் அறிக்கையிலிருந்து சமரசம் வெற்றியடைந்ததாகத் தோன்றுகிறது. சமரச மையம் முன்பாக தரப்பினர்கள் கூட்டு சமரசக்

குறிப்பை நிறைவேற்றினர் மற்றும் 28.04.2016-ல் நிறைவேற்றப்பட்ட கூட்டு சமரச குறிப்பின் நகலானது எங்கள் முன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எனவே, சமரச மற்றும் இசைவுத் தீர்வு முன்பாக தரப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட கூட்டு சமரச குறிப்பில் கண்ட வரையறைகளின்படி இரு மேல்முறையீடுகளும் தீர்வு செய்யப்படுகிறது. செலவுத்தொகை குறித்த உத்தரவு இல்லை. இம்மேல்முறையீடுகளில் ஏதேனும் பல்வகை மனுக்கள் நிலுவையில் இருந்தால் அது முடிக்கப்படுகிறது."

7. இரு தரப்பினர்கள் முன்பாக பிறப்பிக்கப்பட்ட அந்த உத்தரவு அனுப்பப்பட்ட பின்னரும், இழப்பீட்டை செலுத்துவது நிறைவேற்றப்படவில்லை. எனவே, கூட்டு சமரசக் குறிப்பில் கணக்கிடப்பட்டவாறு ஒப்புக்கொண்ட இழப்பீடான ரூ.3,48,46,578/-ஐ செலுத்தும்படி அதிகாரிகளை உத்தரவிடக்கோரி உயர்நீதிமன்றம் முன்பாக நில உரிமையாளர்கள் நீ.பே.மனு எண்.34175/2016-ஐ தாக்கல் செய்துள்ளனர். நீ.பே. மனுவின் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டபின், கூட்டு சமரசக் குறிப்பில் கையொப்பமிட்ட வருவாய்க் கோட்ட அதிகாரி, உயர் அதிகாரிகளின் அனுமதி பெறவில்லை எனக் கூறி, உயர்நீதிமன்ற உத்தரவை வருவைத் துறை நிறைவேற்றுவதற்குப் பதிலாக 10.06.2016 தேதியிடப்பட்ட உத்தரவை திரும்பப் பெறுமாறு கோரி மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். எல்.ஏ.ஏ.எஸ்.303/2013-ல் எல்.ஏ.ஏ.எஸ்.ஏ.பி.எண்.59/2017 மற்றும் எல்.ஏ.ஏ.எஸ்.353/2015-ல் எல்.ஏ.ஏ.எஸ்.ஏ.பி.எண்.60/2017 ஆகிய திரும்பப்பெறும்

மனுக்களை அனுமதித்து, எல்.ஏ.ஏ.எஸ்.எண்கள்.303/2013 மற்றும் 353/2015 ஆகியவற்றை மீண்டும் ஒப்படைத்தது.

8. மீட்பு செய்தபின், மீண்டும் ஒப்படைத்த பின்னர், குறித்தனுப்புகை நீதிமன்றம் நிர்ணயம் செய்த ஒரு சதுர கஜத்திற்கு ரூ.250/- என்பதற்குப் பதிலாக ஒரு சதுர கஜத்திற்கு ரூ.100/- என இழப்பீட்டைக் குறைத்து, 24.11.2017 தேதியிடப்பட்ட உத்தரவு மூலம் வருவாய்த்துறையால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை உயர்நீதிமன்றம் அனுமதித்தது. விளைவாக, நில உரிமையாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

9. எல்.ஏ.ஏ.எஸ். எண்கள்.303/2013 மற்றும் 353/2015-ல் பிறப்பிக்கப்பட்ட 24.11.2017 தேதியிடப்பட்ட உத்தரவைச் சார்ந்து, அதே எதிர்ப்புக்குள்ளான அறிவிக்கை மூலம் கையகப்படுத்தப்பட்ட நிலம் தொடர்பாக பக்ருதீன் அலி (இங்கு மேல்முறையீட்டாளர்)-யால் தாக்கல் செய்யப்பட்ட எல்.ஏ.ஏ.எஸ்.எண்.163.2016-ம் 19.12.2017 தேதியிடப்பட்ட உத்தரவு மூலம் உயர்நீதிமன்றத்தால் தீர்வு செய்யப்பட்டது.

10. உயர்நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவை எதிர்த்து, இழப்பீட்டின் அளவு குறித்து வினா எழுப்பி, வட்டியுடன் இழப்பீடு வழங்கக் கோரி நில உரிமையாளர்கள் இம்மேல்முறையீட்டினைத் தாக்கல் செய்துள்ளனர். வளர்ச்சிக்கான கட்டணங்களைக் கழித்தல் மற்றும் உயர்நீதிமன்றத்தால்

வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலத்தின் பகுதி குறித்து கூறவில்லை என்ற காரணத்தால் எதிர்ப்புக்குள்ளான உத்தரவை எதிர்த்து வருவாய்த் துறையினரும் மேல்முறையீடு செய்துள்ளனர்.

11. இழப்பீடு ஒரு சதுர கஜத்திற்கு ரூ.1000/-வீதமும், நி.கை. சட்டம் பிரிவு 23 (2)-ன் கீழ் உள்ளவாறு 30 சதவிகித கருணைத்தொகையும், பிரிவு 23 (1) ஏ-ன் கீழ் கூடுதல் சந்தை மதிப்பு 12 சதவிகிதமும் மற்றும் பிரிவு 24-ன் கீழ் செய்யப்பட்ட அறிவிக்கை நாளிலிருந்த தீர்வம் நாள் வரை சட்டப்பூர்வ வட்டியுடனும் வழங்க கணக்கிடுமாறு குறித்தனுப்புகை நீதிமன்றம் முன்பு வேண்டுரைக்கப்பட்டுள்ளது என்று நில உரிமையாளர்களின் கற்றறிந்த வழக்குரைஞர் சமர்ப்பித்தார். அவ்வாறு முன்வைக்கப்பட்ட வாதங்களை பரிசீலித்த பின்னர், கிரைய ஆவண நகல் (வா.சா.1) அதாவது பத்திரம் எண்.1208/81-ஐ சார்ந்தும் வா.சா.2 மற்றும் வா.சா.3 ஆக தாக்கல் செய்யப்பட்ட பகதூர்புர் என்ற மற்றொரு கிராமத்தின் நிலம் தொடர்பாக வெவ்வேறு அசல் மனுக்கள் மீது எழுந்த சி.சி.சி.ஏ. எண்கள்.6/1987 மற்றும் 110/1987 எண்ணுடைய மேல்முறையீடுகளில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் உத்தரவுகள் டோபோ வரைபடம் வா.சா.4, வா.சா.5 மற்றும் வா.சா.6-ஆகா தாக்கல் செய்யப்பட்ட அட்டாபூர் மாறட்டும் மீர்சாகர் கிராம வரைபடம், வருவாய்க்கோட்ட அதிகாரியால் அனுப்பப்பட்ட 28.08.2019 தேதியிட்ட நேர்முகக்கடிதம் வா.சா.7 மற்றும் அ.சா.1-ஆன கோருரிமையாளர், ஓய்வு பெற்ற அரசு ஊழியரான சர்வேயர் அ.சா.2-ன் வாக்குமூலங்கள் மற்றும் வா.சா.1 ஆன நில கையெடுப்புகை

அதிகாரியின் வாக்குமூலம் மற்றும் பி.சா.2 விசாரிக்கப்பட்ட துணை மாவட்ட ஆட்சித் தலைவர்-ஆர்.டி.ஓ-ன் வாக்குமூலத்தைக் கருதியும், ஒரு சதுர கஜத்திற்கு ரூ.6/-என்பதை உயர்த்தி ஒரு கஜத்திற்கு ரூ.250/- ஆக இழப்பீட்டை குறித்தனுப்புகை நீதிமன்றம் தீர்மானித்தது. சந்தை மதிப்பில் 30 சதவிகித கருணைத்தொகையும், 12 சதவிகித வட்டியுடன் கூடுதல் சந்தை மதிப்பும் நி.கை. சட்டம் பிரிவு 23 (2)-ல் கூறப்பட்டுள்ள வட்டியும் நில உரிமையாளர்கள் உரிமையுடையவர்கள் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. கையகப்படுத்தப்பட்ட நிலத்தைச் சுற்றியும், கையகப்படுத்தப்பட்ட நாளன்று அதன் சந்தை மதிப்பை கருத்தில் கொண்டு பார்க்கையில், மேற்படி தொகையின் அளவு குறித்து உயர்நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. வருவாய்த் துறை ஒப்புக்கொண்டவரு, கூட்டு சமரச குறிப்பில் தீர்மானத்தின்படி ஒரு சதுர கஜத்திற்கு ரூ.350/- என இழப்பீடு நிணயிக்கப்பட்டு அது உயர்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று சமரசத்தின்போது அது வலியுறுத்தப்பட்டது. பின்னர், கூட்டு சமரச குறிப்பிற்கு மேல் அதிகாரிகளின் ஒப்புதல் பெறப்படவில்லை என்ற காரணத்தின்பேரில் வருவாய்த்துறை திரும்பப் பெறும் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது. கோட்ட வருவாய் அதிகாரியால் ஒப்புக்கொள்ளப்பட்ட வீதத்தை வருவாய்த்துறை எதிர்க்கவில்லை. ஆயினும், உயர்நீதிமன்றம் திரும்பப்பெறும் மனுக்களை அனுமதித்து, மேல்முறையீடுகளை மீட்டெடுத்துள்ளது மற்றும் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மூலம், எந்த

அடிப்படையுமின்றி, கணக்கீட்டை மாற்றியமைத்து ஒரு சதுர கஜத்திற்கு ரூ.100/- என இழப்பீட்டைக் குறைத்துள்ளது.

12. மாறாக, வருவாய்த்துறையால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில், அவ்விதம் தீர்வம் செய்யப்பட்ட இழப்பீட்டிலிருந்து வளர்ச்சிக் கட்டணம் கழிக்கப்படவில்லை என்றும் உயர்நீதிமன்றம் அவ்விதம் முடிவு செய்த வீதம் இழப்பீடு கணக்கிடும்போது வளர்ச்சிக்காக தேவைப்படும் பரப்பு குறைக்கப்படவில்லையென்றும் வலியுறுத்தி மற்றும் நில உரிமையாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து துறை தாக்கல் செய்த மேல்முறையீட்டை அனுமதிக்குமாறு வேண்டியுள்ளது.

13. தரப்பினர்களுக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர்களின் வாதங்களைக் கேட்டும், பதிவில் கொண்டுவரப்பட்ட சான்றாவணங்களைப் பார்த்தும் நிலம் கையகப்படுத்துதல், 1981-ம் வருடத்தில் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. குடிநீர், மின்வசதி, வடிகால், தொலைபேசி, போக்குவரத்துக்கு போன்ற வசதிகளைக் கொண்ட மிகுந்த வளர்ச்சியுற்ற இரட்டை நகரத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலம் அமைந்துள்ளது என்பது மறுக்க முடியாதது. அந்த ஆண்டில் அட்டாபூர் கிராமத்தில் எந்த கிரைய ஆவணமும் இல்லாததால் அருகிலுள்ள கிராமமான பகதூர்புர் கிராமத்தில் நடைபெற்ற ஒரே கிரைய ஆவணம் வா.சா.1 நாள் 21.09.1981 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. டோபோ வரைபடமான வா.சா.4-ன்படி பகதூர்புர் மற்றும் அட்டாபூர் ஆகிய இரு கிராமங்களிடையே உள்ள

தூரம் 1320 மீட்டர் தான். அந்த கிரைய ஆவணத்தின்படி சொல்லப்பட்ட நிலத்தின் மதிப்பு ஒரு சதுர கஜத்திற்கு ரூ.200/-ஆகும். இரு வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைகளான வா.சா.2 மற்றும் வா.சா.3 ஆகும். அதில், அதே நேரத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட இழப்பீடு ஒரு சதுர கஜத்திற்கு ரூ.250/-ஆகும். அந்த ஆவணங்கள் அ.சா.1 மற்றும் அ.சா.2 சான்றுரை உறுதிபடுகிறது. துறை சாட்சியான பி.சா.2, தமது வாக்குமூலத்தில் கடேதான் கிராமம் ஒரு தொழிற்பேட்டை என்றும் அட்டாபூர் கிராமத்திலிருந்து 3 1/2 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது என ஒப்புக்கொள்கிறார். வேளாண் பல்கலைக்கழகம், தேசிய காவல்துறை பயிற்சி மையம் அருகில் அமைந்துள்ளது. கையகப்படுத்தப்பட்ட நிலத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் அந்திரப்பிரதேச உயர்நீதிமன்றம் அமைந்துள்ளது. நேரு விலங்கியல் பூங்காவுக்காக வடிகால் அடுக்கு அமைப்பதற்காக அந்த நிலம் தேவைப்பட்டுள்ளது. நில உரிமைதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட சான்று, எந்த ஆவணமும் தாக்கல் செய்து எதிர்க்கப்படவில்லை. மாறாக, துறை சாட்சி, நீதிமன்றம் முன்பாக ஹைதராபாத் நகரின் சுற்றுப்புறத்தில் உள்ள முக்கியமான பகுதியான கிராமத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலம் உள்ளதெனத் தெரிவித்துள்ளார். பதிவுருக்களில் எந்தப் பொருண்மையும் இல்லாததால் அருகில் உள்ள கிராமமான பகதூர்புரின் கிரைய ஆவணமாக வா.சா.1-ஐ குறித்தனுப்புகை நீதிமன்றம் சரியாக சார்ந்துள்ளது. கையகப்படுத்தப்பட்ட நிலம் அட்டாபூர் கிராமத்தில் அமைந்திருந்தாலும் ஆனால்

அது, ஒரு சதுர கஜத்திற்கு ரூ.200/- என நில மதிப்பீடு செய்யப்பட்டுள்ள கிராமமான பகதூர்புருக்கு அருகில் உள்ளது. அருகிலுள்ள நிலத்துக்கு இழப்பீடு வழங்கும்போது, தீர்ப்பாணைகள் வா.சா.2 மற்றும் வா.சா.3-ல் குறிப்பிட்டுள்ளபடி ஒரு சதுர கஜத்திற்கு ரூ.250/- என நீதிமன்றம் மதிப்பை முடிவு செய்துள்ளது. 28.08.1991 கோட்ட வருவாய் அதிகாரியின் நேர்முகக் கடிதத்தில் கையகப்படுத்திய நாளின் குறைந்தபட்ச மதிப்பு ஒரு சதுர கஜத்திற்கு ரூ.200/- என ஒப்புக் கொண்டுள்ளார். இந்த விஷத்தை சமரசத்திற்காக அனுப்பிய பிறகு, வருவாய் கோட்டாட்சியரால் கூட்டு சமரசக் குறிப்பு நிறைவேற்றப்பட்டு அதில் ஒரு சதுர கஜத்திற்கு ரூ.500/- என்பதற்குப் பதிலாக, வருவாய்த்துறை ஒப்புக்கொண்டவாறு, சமரசத் தீர்வாளர் ஒரு சதுர கஜத்திற்கு ரூ.350/- என நிர்ணயம் செய்துள்ளார். கோரப்பட்ட நிலத்தின் மதிப்பு அதிகமாக இருப்பதாக எதிர்க்காமல், அத்தகைய சமரசம் மேல் அதிகாரியின் ஒப்புதல் இல்லாமல் ஒப்பம் இடப்பட்டது என்று மட்டுமே, திரும்பப்பெறும் மனுக்களில் கூட்டு சமரசக் குறிப்பு எதிர்க்கப்பட்டுள்ளது. எனவே, நில உரிமையாளர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்க்கப்படாத ஆவணங்களை உதாசீனப்படுத்தியும், பதிவில் எதிர்ப்புடன் கூடிய ஆவணங்கள் ஏதும் இல்லாதபோது மாற்றுக் கணக்கீட்டைப் பயன்படுத்தி ஒரு சதுர கஜத்திற்கு ரூ.100/- என இழப்பீட்டை கணக்கீடு செய்ததில் உயர்நீதிமன்றம் பிழை புரிந்துள்ளது என்பதே எங்களது கருத்தாகும். துறை சாட்சியான பி.சா.2-ன் சாட்சியப்படி, தற்போது ஹைதராபாத்தின் மையப்பகுதியான வேளாண் பல்கலைக்கழகம், தேசிய

காவல்துறை பயிற்சி மையம் மற்றும் ஆந்திரப்பிரதேச உயர்நீதிமன்றத்தின் அருகில் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. மேற்சொன்னவற்றை பரிசீலித்தும், கையகப்படுத்தப்பட்ட நாளான அதாவது 40 வருடங்களுக்கு முன்புள்ள 1981-ஐ கருத்தில் கொண்டும், அந்த நிலத்தின் மதிப்பு ஒரு சதுர கஜத்திற்கு ரூ.250/-குக் குறையாமல் கணக்கிடப்பட வேண்டும். அது நில உரிமையாளர்களால் சாட்சியம் மூலம் பதிவு செய்யப்பட்ட ஆதாரமாக உள்ளது.

14. வளர்ச்சிக் கட்டணத்துக்காக குறைப்பது மற்றும் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலத்தின் பரப்பு குறித்து வருவாய்த் துறையால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில் எழுப்பிய பிரச்சனையை குறித்து நாங்கள் மீண்டும் பரிசீலிக்கின்றோம். சமீபத்தில், ரெட்டி வீரனா -எதிர்- உத்திரப்பிரதேச மாநில அரசு மற்றும் பலர் 2022 எஸ்.சி.சி. இணையவழி 562-ல், வளர்ச்சிக்கான கட்டணம் குறைக்கப்படுவது மறுக்கப்பட்டுள்ளது. மேலே விவாதித்தவாறு, தற்போதைய வழக்கில், 1981-ஆம் ஆண்டில் 40 ஆண்டுகளுக்கு முன் கையகப்படுத்தப்பட்டு, ஒரு சதுர கஜத்திற்கு ரூ.6/- என, நீதிமன்றங்களில் வழக்கிற்குப் பின்னர் நிலம் கையகப்படுத்துகை அதிகாரியால் இழப்பீடு முடிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் மதிப்பு 100 மடங்காக உயர்ந்துள்ள ஹைதராபாத்தின் மையப்பகுதியில், இந்த நிலம் அமைந்து உள்ளது. நகரின் வளர்ச்சி ஏற்கனவே நடைபெற்றுவிட்டது. 40 ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்ட நில உரிமையாளர்களின்

நிலங்களுக்கு தசாங்களாக இழப்பீடு வழங்காத ஒரு நிலப்பகுதிக்கு மட்டுமே, ஏற்கனவே ஏற்பட்ட வளர்ச்சிக்கு வளர்ச்சி கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கமுடியாது. எனவே, வருவாய்த்துறையால் வைக்கப்பட்ட வேண்டுரைகள் தகுதி இழக்கிறது.

15. மேற்சொன்னவற்றை கருத்தில் கொண்டு, நில உரிமையாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது மற்றும் வருவாய்த்துறையால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. குறித்தனுப்புகை நீதிமன்றத்தின் உத்தரவு மீட்டெடுத்து, உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது. குறித்தனுப்புகை நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டவாறு இழப்பீட்டுத் தொகை கணக்கிடப்பட்டு, இந்தத் தீர்ப்புரை நாளிலிருந்து இரு மாதங்களுக்குள் செலுத்தப்படவேண்டும். வழக்கின் சங்கதிகளிலிருந்து தரப்பினர்கள் தன் தமது செலவீனங்களை ஏற்கவேண்டும்.

மேல்முறையீடுகள் தீர்வு செய்யப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."